# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 787/16/பேரு 1
ஆணை எண்: 198/2017
நாள்: 3/08/2017

**திரு. எம்.கோபால்,**
**பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் (ஓய்வு),**
**பாப்பிரெட்டிபட்டி,**
**தர்மபுரி மாவட்டம். --- முறையீட்டு மனுதாரர்**

**திரு.ஜெ. திருஞானம்,**
**பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,**
**201 மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**சேலம் மற்றும் பலர் --- எதிர் மனுதாரர்கள்**

## ஆணை

திரு. எம். கோபால், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் (ஓய்வு) என்பவரது 01.08.2016ம் நாளிட்ட முறையீட்டு மனுவில் தன்னை விட இளையவரான திரு. ஆர். ஜெயபால் என்பவர் (இணை இயக்குநராக ஓய்வு பெற்றவர்) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் பணியிடத்தில் 23.10.1992 முதல் கருத்தியலாக பதவி உயர்வு அளிக்கப்பெற்றுள்ளதாகவும் தனக்கும் அதே போன்று பதவி உயர்வளித்து ஆணை வழங்குமாறும் தனது முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளார். இவரது முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.04.2016ல் பெறப்பட்டு 787/2016 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி முறையீட்டு மனுவில் சேலம் பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் மற்றும் தர்மபுரி பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் ஆகியோரை எதிர் மனுதாரர்களாக குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவம் சட்டம் 2014, பிரிவு 2 (11) ல் வகுக்கப்பட்டுள்ள " பொது ஊழியர் " (Public Servant) என்ற வரையறைக்குள் இவர்கள் உட்படாததாலும் ஊதிய / ஓய்வூதிய மறு நிர்ணயம் ஆகிய பணியமைப்பு தொடர்பான கோரிக்கைகள் உள்ளதாலும் பரிசீலித்து தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு

பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2017ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 3ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1) திரு. எம். கோபால்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்(ஓய்வு)
95 ஜீவா நகர்,
பாப்பிரெட்டிபட்டி (அஞ்சல்),
தர்மபுரி மாவட்டம் – 636 905.

2) பேரூராட்சிகளின் இயக்குநர்,
குறளகம்,
சென்னை